Registered No. M. 1014.

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் சமாஜத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறநில்.

வெண்டாமரை உ.	1914-ம் ஆ மார்ச்சு மீ	இதழ் ங.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,
கல்லூரி தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

வருஷ சந்தா ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
தபாற்கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

Saigon Sivaya Press, Pondicherry.

உள்ளுறை.

பக்கம்.

திருவண்ணாமலை பிராமண சுவாமிகளென வழங்கும் ஸ்ரீரமண ரிஷிகளின் சரிதம் : — ஸ்ரீமான் தி. வடிவேலு முதலியார், திருவெண்ணெய்நல்லூர். 49

ரமணி (ஓர் காதற் கதை) : — ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப் பிள்ளை, புதுவை. 53

ஷாஜிகானும் தாஜ் மஹாலும் :— ஸ்ரீமான் ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர், புதுவை. 56

வடலூர் சமரச சன்மார்க்க சாதக சங்கம் : — ஸ்ரீமான் செந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர், திருவண்ணாமலை. 59

மாம்ஸ பக்ஷண நிராகரணம் : — ஸ்ரீமான் ஜி. சுவாமிநாதன் ஆசாரியார், தமிழ்வித்வான், கோட்டாறு. ... 61

ஓர் வேண்டுகோளுக்கு விடை : — ஹிதவசனி. 65

வாக்குண்டாம் காப்புச் செய்யுளில் ஒரு ரகசியம் :— ஸ்ரீமான் தி. வெங்கடராமையங்கார், தமிழ்ப்பண்டிதர், பென்ஷன்தார். 66

நியாயமாலா : — ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சிபுரம். 67

சுஜன சம்வாதம் :— ஸ்ரீமான் ஆ. செங்கல்வராயமுதலியார், காஞ்சீபுரம். 69

சமாசாரம். 71

இலக்ஷணவலி. 9

புத்தகவரவு. 73

குறிப்பு. — இப்பத்திரிகைக்குரிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்கக்கூடாது.

362



SRI RAMANA MAHARSHI.

தினர்களை ரக்ஷிக்கும்பொருட்டு குருமூர்த்தமாக எழுந்தருளி
திருஅண்ணாமலையில் பிரஹ்மாநந்த ஸ்வரூபராய் வீற்றிருக்கும்
பிராஹ்மண பால்ய ஸன்யாஸி என்று வழங்கும்

ஸ்ரீ ரமண மஹர்ஷி.

S. NARAYANA REDDY. VICTORIA PRESS, VELLORE.

363

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை உ.] 1914-ம் ஆ மார்ச்சு மீ [இதழ் கூ.

இலௌகிகப் பகுதி.

திருவண்ணுமலை பிராமண சுவாமிகளென வழங்கும் ஸ்ரீ ரமணரிஷிகள் சரிதம்.

வாழ் நாளர்பதமு மாநிலத்தார் வாழ்வதவுந்
தானே யிவைவரினுந் தான்வேண்டேன் – தேனருளுஞ்
செய்யவிரு பாகுகைத் தெய்வமணி யாருவந்து
மெய்யருளே யெற்கீயு மேல்.

ஈன்றளித்தழிக்குஞ் செய்கைக்கேதுவாமயனுய் மாலாய் ஆன்ற முச்சனுமாய்த் தானே அநந்தமூர்த்தியுமாய் நிற்கும் எம்மிறையாகிய சிவபெருமான் திருக்கோயில்கொண்ட தலங்கள் பலவற்றுள்ளும் சிறப் பமைந்ததும பல்வளங்களும் குறைவுறுதுமல்கி அன்பர்களின் மனநிற்கு ஆனந்தமளிப்பதுமாய தலம் அருணேயம்பதியேயாம். பஞ்சபூத தலங்களு ளொன்றுகியுள்ளதும் அடியார்கள் நினைத்தமாத்திரம் முத்தியளிக்கும் வல்லமையுடையதுமான இத்தலத்தில், பிறக்கவும் இருக்கவும் இறக்கவும் வாய்க்கப்பெற்றுரே உத்தம ஜன்மமுடையாவர். அருணேயம்பதியி லுள்ளார்க்குற்ற புனித ஜன்மம்போல் நாமும் அடையப்பெற்றிலமே,

அதற்கு யாது வழியுளது என ஆராயுங்கால், "அண்டபகிரண்ட மறியாத நின்வடிவைக் கண்டவரைக் கண்டாற் கதியாம் பராபரமே." "மூர்த்தி தலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர் வார்த்தைசொலச் சற்குரு வும் வாய்க்கும் பராபரமே." எனத் தாயினுமினிய தாயுமான சுவாமிகள் கூறியதுகொண்டு, அருமறைக்கெட்டா அண்ணலே அகமுகமாயறிந்த உத்தம ஞானிகளைத் தரிசிக்கின் பிறவிப்பிணி நீங்குமென்பதும், அத் தகைய பெரியார்கள் எங்குள்ளார்கள்? அவர்களை எப்படித் தரிசிக்க இயலும்? என வியறுவார்க்கு, மூர்த்தி தலம் தீர்த்தம் முறையே அடை தல் வேண்டுமென்பதும் இனிது பெறப்படுகின்றதன்றே. பிரத்தியக்ஷ மாக மேற்படி வாக்கியத்தின் பயனையடைய விரும்புபவர்கட்கு அருணா சலம் ஒன்றே அதற்கேற்றதலமாம். எல்லாம்வல்ல இறைவன் அருட் சோதி வடிவுடையான் என்பது உலகினர் காணுமாறு விளங்கும் கார்த் திகை தீபத்தைத் தரிசிக்க அடியார் பலரும் அருணையடைந்து தீபதரி சனங் கண்டபின், மலைமீது விருபாக்ஷி குகையி லமர்ந்துள்ள பிராமண சுவாமிகளென வழங்கும் ஸ்ரீ ரமணரிஷிகளைத் தரிசிக்காதவர்கள் இரா ரென்றே கூறலாம். சுவாமிகளைத் தரிசித்து அவர்களின் புன்முறுவலைக் கண்டு ஆனந்த சலதியில் மூழ்கிய அன்பர் பலரும் அவர்கள் சரிதத்தையு மறிய ஆவலுறுவார்களாகையால், அறிந்தவரை ஒருவாறு சுருக்கமாகக் கூறுவாம்.

பல்வளஞ் செறிந்த பாண்டிநாட்டின் றலைநகராயும், சோமசுந்தரக் கடவுளால் 64 திருவிளையாடல்கள் புரியப்பெற்றதாயுமுள்ள மதுரை யம்பதிக்குத் தட்சிண பாரிசத்தில் பாண்டியனுக்குற்ற பிரம்மஹத்தி தீர்த்ததும், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் "ஊனை யுயிர்புகலா யகலிடமாய் முகில்பொழியும்" என்பது முதலான பாமாலை சூட்டப்பெற்றதுமாகிய 'திருச்சுழியல்' எனும் பதியே சுவாமிகள் அவதார ஸ்தலமாகும். அத் தலத்து, செல்வம், கல்வி, கேள்வி, பொறை முதலியவைகள் ஒருங்கே யமையப்பெற்று, வக்கீல் உத்தியோகத்தைத் தொழின்முறையாகக் கொண்ட சுந்தரமையர் என்னும் பிராமணோத்தமர், கற்புக்கணியாம் அழகம்மாள் எனும் மாது சிரோமணியோடுகூடி இல்லறம் நடாத்திவருங் கால், இறைவன் பெருங்கருணையினால் மூன்று ஆண்மகவும், ஓர் பெண் மகவும் பிறந்தன. அது கண்டு பெற்றோர் மகிழ்வெய்தி யிருந்தனர். முற்கூறிய ஆண்மகவு மூன்றனுள் இடையிற்றோன்றிய 'ரமணன்' எனும் நாமம்பெற்ற பெரியாரே நமது சுவாமிகளாவர். பிரமாதி ஆம் மார்கழி மீ புனர்வசு நக்ஷத்திரத்தில் திருவவதாரஞ்செய்த நம் சுவாமிகள் வயதுவந்தபின் தமது தமையனாரோடு மதுரைக்குச்சென்று அங்குள்ள

சிறிய தகப்பனூர் ஆதரணையில் கல்வி பயிலுவாராயினர். தமது பதினு ருவது வயதில் மெட்ரிகுலேஷன் வகுப்பில் பயின்றுவருங்கால் அருணு சலேசுவரருடைய பிரபாவத்தைப் பலர் சொல்ல அறிந்து அவர்மீது அன் புடையவராய் அங்குச்சென்று தரிசித்தற்கில்லையேயென வருந்துவார். யாரேனும் அருணசலம் என்றால் சுவாமிகட்குத் தேகம் மயிர்க்கூச் செறிந்து தம்மை மறந்த நிலையில் ஆனந்தபரவசராகி நிற்பர். உலகம் அநித்தியம், ஈசுரன் நித்தியம் என்ற எண்ணம் மனதில் ஊன்றச் சத்தினி பாதமுதிக்க உண்மை யுணர்வு தோன்றினவராய், மீனாக்ஷி சுந்தரேசுவரர் ஆலயஞ்சென்று இடையறு அன்பினராய், நாத்தழும்பேற உள்ளங் குழைய உரோமஞ் சிலிர்க்க அடியார் குழாத்துத் தம்மையு மொருவராக வாக்குமாறு ஆனந்தக் கண்ணீர் பெருக உருகுவார். இவ்வாறு சில்பகல் செல்ல, ஓர் நாள் புத்தகம் படித்துக்கொண்டே தம்மை மறந்து சமாதி நிஷ்டையிலிருந்ததை இவரது முற்பிறந்த சோதரர் கண்ணுற்று, "இந் நிட்டையுடைய நினக்கு உலகப்பற்று வேண்டாவன்றே" என வாளா மொழிய, அதையே உறுதியாகக்கொண்டு சதா தமது மனதின்கண்ணே ஆனந்த நடம்புரியும் அருணசலேசுவரர்பாற் சென்று தமதாவலைத் தணிக் கக்கருதி, தமது கைவசமிருந்த சொற்பப்பொருளை வழிச்செலவாகக் கொண்டு அருணசலத்திற்குப் பிரயாணமாயினர்.

பிரயாணமாவதற்கு முன்னரே, வீட்டிலுள்ளார் தம்மைத் தேடா வண்ணம் ஓர் துண்டுக் கடிதத்தில், "நான் எனது தந்தை தாளை நாடிச் செல்கின்றேன், நீவிர் தேடுதல் ஒழிக" என வரைந்து ஆங்கோர் பால் வைத்துவிட்டுத் திருவண்ணுமலைக்குப் புகைரதமுண்டென்பதை அறியா ராய், உலகப் படத்திற் பார்த்து, திண்டிவனத்திற்குச் சமீபத்திலுள்ள தாக நினைந்து, அவ்வாறே திண்டிவனம் டிக்கட்டுபெற்றுச் செல்லுங்கால், விழுப்புரத்திலிருந்து திருவண்ணுமலைக்குப் புது வண்டித் தொடர் போட் டிருப்பதாகப் பலர் கூற அறிந்து விழுப்புரம் இறங்கி மிகுதியுள்ள சொற் பப் பொருளால் மாம்பழப்பட்டு வரையும் வேறு டிக்கட்டு பெற்றுத் திருவண்ணுமலை செல்லும் வண்டியேறி மாம்பழப்பட்டிலிறங்கி அவ ணின்றும் கால்நடையாகத் திரு அறையணி நல்லூர் அடைந்து, அங்குக் கயிலையனைய கற்பாதைமீதுள்ள சௌந்தரிய கனகாம்பிகா சமேத ஸ்ரீ அதிசுல்லியநாதேசுவரரைத் தரிசித்து, சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பிர நிஷ்டை செய்துள்ள அருணசல இலிங்கத்தின் சமீபம் சென்று தியான முகமாய்ச் சுழிமுனையில் ஜோதி தரிசனம் செய்து, திருக்கோவலூர் சென்று அந்தகாசுர சம்மார மூர்த்தியாய வீரஸ்தானேசுவரரைத் தரி சித்து, அங்குள்ள ஓர் பாகவதர்பால் தமது காதணியை வைத்துச் சொற்ப

பொருள் பெற்று, புகைாத மேறித் திருவண்ணுமலையடைந்து கிரிதரி சனம் செய்து ஆலயத்துட்புக்கு, உள்ள நெக்குருக ஆவல்தணியும்வரை பரம்பொருளாயுள்ள அப்பெருமானே வணங்கி வெளிப்போந்து பூணூ னல் உத்தரீய முதலியவைகளே யொழித்து, ஆயிரக்கால் மண்டபத் துள்ள பாதாள லிங்கத்தின் பக்கல்வைகி நிட்டைபுரிவாராயினர். அதைக் கண்டு அறியாமையுடைய சில இளம்பிள்ளைகள் கன்மாரி பொழிய அதைப் பொருட்படுத்தாது சின்ன ளங்கிருந்து பின் சிவகங்கைக்குச் சமீபமுள்ள இலுப்பைமரம், வாழைத்தோட்டம், சுப்பிரமணியர் ஆலயம் முதலிய விடங்களில் சில மாதமிருந்து அதன் பிறகு வேட்டவலம் ரோட்டிலுள்ள குருமூர்த்தத்தில் இரண்டு வருடம் தங்கியிருக்க, அப் போது வருந்திப்பெற்ற அன்னையும், வளர்த்த சிறிய தந்தையும் வந்து தரிசித்துச் சென்றனர். அதைவிட்டு விநாயக ராலயத்திலும், பவளக் குன்றிலும் சில்பகல் வைகி, விரூபாக்ஷியோகியர் என்ற பெரியார் சமாதி யடைந்ததாய் மலைமீதுள்ள விரூபாக்ஷி குகையடைந்தனர். சுவாமிகள் மதுரையினின்று அருணையடைந்த பின் 12 வருஷகாலம் மௌன நிலையிலிருந்தனர். பின்னர் இறைவன் ஆணைப்படியும் உலகிலுள்ள என்போன்ற அடியார்கள் உய்யும்பொருட்டும் சென்ற 6 வருடமாகச் சிறுபான்மை வார்த்தையாடி வருகின்றனர். சுவாமிகள் நாவினின் றெழும் ஒவ்வொரு சிறு வசனமும் உலகம் மதிப்பிடற்கரிய சுருதி வாக்கி யங்களாகவே விளங்குகின்றன. புன்சிரிப்பும் கருணையும் நிறைந்த சுவாமிகளைத் தரிசித்த மாத்திரத்தில் உண்மை யன்புடைய ஒவ்வொருவ ருக்கும் மனவிருள் நீங்கி ஞானம் சுடர்விட்டொளிரு மென்பதற்கு எட்டுணையு மையமின்று. பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் வந்து தரிசித்துச் செல்வதொக்க ஆங்கிலேயர் பலரும் வந்து தரிசித்துச் செல் கின்றனர். அப்படித் தரிசித்த ஆங்கிலேயர்களில் உள்ளன்புடையார் ஒருவர் மற்ற ஆங்கிலேயர்களும் தம்போன்று ஆனந்த சலதியி லமிழ வேண்டுமெனும் நோக்கோடு லண்டனில் பிரசுரமாகும் "இண்டர் நாஷ னல் சைகிக் கெஜட் (The International Psychic gazett) என்ற பத்திரி கையில் தெளிவாகத் தமது அனுபவத்தை எழுதியிருக்கிறார். அதில் சுவாமிகளுடைய திருவுருவப்படம் அழகாக விளங்குகிறது. மேற்படி பத்திரிகையிலுள்ள ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. சுவாமிகள் ஆல யத்திருந்தபோது வெளிப்புறத்து ஓர் இடத்தில் நிஷ்டை கூடியிருந் தனர். அப்பொழுது தரிசனார்த்தம் சென்ற ஓர் வயோதிக மாது மழை மிகுதியால் ஓர்புறந் தங்கிச் சுவாமிகளைக் கவனிக்க, சுவாமிகள் மழையைப் பொருட்படுத்தாது சமாதி நிலையிலிருந்ததைக் கண்ணுற்று மழை விட்ட

367

பின் சமீபத்தில் சென்று பார்க்க, சுவாமிகள் நிஷ்டைகொண்டிருந்த விடத்தில் சொற்பதூரம் வரை சதுரமாக மழைத்துளி விழாது பூமி காய்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்றுப் பலருக்கும் காண்பித்ததாகவும் இங்ஙனம் நடந்ததை நேரே கண்டவர்கள் கூறியதாகவும் எழுதியிருக்கிறார். இவைகளையெல்லாம் உய்த்துணருங்கால் சுவாமிகளை ஒரு அவதார புருஷர் என்று கூற எவரும் பின்னிடார். "அன்பர் பணிசெய்யவெனை யாளாக்கிவிட்டுவிட்டா, லின்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே" என்றபடி உலகினர்களை ஈடேற்றுமாறு அவதாரம் செய்துள்ள நமது சுவாமிகளை வழிபட்டு என்றும் அழியாப் பேரின்பத்தைப் பெற்று இன்பமடைவோமாக. சுபம்.

தி. வடிவேலுமுதலியார்.

திருவெண்ணெய்நல்லூர்.

ரமணி.

ஓர் காதற் கதை.

அத்தியாயம் 5.

(தொடர்ச்சி.)

அதிலடங்கிய விஷயமாவது :—

" இக்கடிதச் சுருளைக் கண்டெடுக்கும் புண்ணியவான் அல்லது புண்ணியவதி ஷண்முகபுரியில் வசிக்கும் வக்கீல் ஜனார்த்தனர் வீட்டுக்குப் போய் அவர் விலாசமிடப்பட்டு இத்துடனிருக்கும் கடிதத்தை அவருக்குக் கொடுத்தால், அன்னோர் ஒரு பெருஞ் சுகிர்த காரியஞ் செய்தவராவார். "

இவ்விரண்டாவது கடிதத்தையும் வாசித்துவிட்டு ஜனார்த்தனன் ஸந்யாசியின் முகத்தைப் பார்த்தான். அவரது கரிய மீசைக்கும் தாடிக்கும் நடுவே, அவரது விபூதிபடிந்த இதழ்களில் புன்னகை திகழ்ந்தது.

" ஸ்வாமி ! இக்கடிதத்திற் கண்டிருக்கிற பிரகாரம் நீங்கள் ஒரு அரிய சுகிர்த காரியமே செய்திருக்கிறீர்கள். ஆனல் தக்க சில வார்த்தைகளால் அதற்காக நான் உங்களுக்கு நன்றி பாராட்டுவதற்குக்கூட எனக்குச் சாவகாசமில்லாததற்காக என்னை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ளு

கிறேன். என்னசெய்வேன்? நீங்கள் கொணர்ந்த கடிதத்தில் அடங்கிய விஷய சம்பந்தமாக இப்பொழுதே நான் வெளியே போகவேண்டியது அவசியகமாயிருக்கிறது. ஆயினும் நீங்கள் இவ்விடத்திலேயே இருங்கள். உங்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் வேண்டுமோ அவ்வளவிற்குந் தக்க ஏற்பாடு செய்கிறேன்" என அகத்தில் ஆத்திரம் பொங்கக் கூறினன் ஜனர்த்தனன்.

"நீங்கள் இந்த அகாலத்தில் வெளியே போகவேண்டியதற்கு அவ்வளவு அவசர காரியமென்ன?"

"ஐயோ ஸ்வாமி! ஓர் பேதைப் பெண்ணின் மானம், கற்பு, பிராணன் மூன்றும் ஒவ்வொரு க்ஷணமும் ஆபத்திலிருக்கின்றன. நான் உடனே போகவேண்டும். உத்தரவு கொடுங்கள்." என்ற பரபரத்த மொழிகளைக் கொட்டினன் ஜனர்த்தனன்.

ஸந்யாசி தன் முகத்தை நன்றாய் நிமிர்த்தித் தன் மூக்குக் கண்ணாடி மூலமாய் எதிர்நின்றானை உற்று நோக்கினர்.

"என்ன சொன்னாய்! கற்பும் மானமும் உயிரும் ஆபத்திலிருக்கும்பொழுது நான் சுவஸ்தமாய் இங்கே தூங்கிக்கொண்டா இருக்கவேண்டும். பேஷ்! வெகுநேர்த்தியான உபசாரம்! நான் தூங்குமூஞ்சிச் சாமியார் என்று எண்ணினாய்! எங்கேயிருக்கிறாள் அந்தப் பேதை? உடனே சொல். நான் இனி நொடிப்பொழுதும் நிற்கமாட்டேன்" எனச் சிங்கத் தொனி நிகர்த்து மிடற்றினின்றெழுந்த உரத்த கம்பீரக் குரலில் கர்ஜித்து, தன் வலக்கையிலிருந்த யானை முகப்பிடியுடைய கோலினால் பூமிதேவியை ஓர் இடி இடித்தார் ஸந்யாசி.

ஜனர்த்தனன் பிரமித்து நின்றுவிட்டான். அந்தப் பிரமையினால் பேசவுஞ் சக்தியற்றவனாயினன். உட்கட்டில் துயின்றுகொண்டிருந்த பங்கஜவல்லியம்மாள் பதறி விழித்தெழுந்து விஷயமென்னவென்றறிந்து கொள்ளத் தன் மருகனருகே வந்துவிட்டாள்.

"ஹே! உன் மத்தமே! என் இப்படி நிற்கிறாய்! நீ என்ன ஸ்தம்பமா அல்லது ஊமையா!" என மீண்டுங் கர்ஜித்தனர் சந்யாசி.

ஜனர்த்தனனது சித்தப்பிரமை சிறிது ஒழிந்தது. "இல்லை, சுவாமி! நானும் வருகிறேன் நீங்களும் வாருங்கள். இதோ, நொடிப் பொழுதில் கோச்வண்டி கொண்டுவருகிறேன்" எனக் குழறிவிட்டுத் தன் கையிலிருந்த மெழுகுவர்த்தி விளக்கை அருகிலிருந்த திண்ணையின் மீது வைத்துத் தன்னறைக்கோடி வேறொரு தீபமேற்றிக் கையிலெடுத்

துக்கொண்டு உட்கட்டுப்புறமாய்த் தோட்டத்திற்கோடி, "கோச்மேன்! கோச்மேன்! கோச்மேன்!" என உரக்கக் கூவினன்.

சுமார் பத்துநிமிஷத்தில் கோச்வண்டி வாசலின் முன்பு நின்றது. தான் ரமணியைத் தேடிச் செல்வதாகத் தன் அத்தைக்குச் சொல்லிவிட்டுச் சுவாமிகள் சகிதம் ஜனார்த்தனன் வண்டியிலேறினன். இரவு சரியாய் இரண்டரை மணிக்கு விஜயரங்கதாசாது "விஜயவிலாசம்" என்ற பங்களாவின் முன்பு வண்டி நின்றது. இருவரும் இழிந்தனர். பங்களாவின் வாயிற் கதவு சாத்தப்பட்டிருந்தது. பாதரக்ஷை தரித்த காலொன்றினால் சந்யாசி அக்கதவின்மீது உதைத்தார், நிமிஷநேரமாயிற்று, கதவு மூடப்பட்டவாறே யிருந்ததால் மீண்டும் முன்னிலும் பலத்த இரண்டு மூன்று உதையுண்டது. அன்றியும்,

"யார் உள்ளே! திற கதவை! போலீஸ்! போலீஸ்! திறவாவிட்டால் கதவு தும்ஸமாய்விடும்" எனக் கோடையிடி யன்ன குரலிற் கூவிக்கொண்டு தன் கைக் கோலினால் கதவை எழெட்டு முறை இடித்தார்.

சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. சுவாமியும் ஜனார்த்தனனும் ஓர் ஸ்திரீயின் முன்பு நின்றனர்.

"எந்த அறையில் அடைத்துவைத்திருக்கிறாய்?" எனக் கர்ஜித்தனர் சந்யாசி. கதவைத் திறந்த ஸ்திரீ மருண்டு மௌனமாய் நின்றாள்.

"சொல் பதில், இல்லாவிட்டால் இதோ இந்தக் கழியால் உன் மண்டையைச் சுக்கல் சுக்கலாய்ச் சிதறச்செய்வேன்" என்று அவள் தலைக்கு நேராகக் கழியை ஓங்கினர் சந்யாசி.

ஸ்திரீயின் தேக முழுவதும் நடுக்கமுற்றது. 'காட்டுகிறேன்' என்ற ஒரே மொழியைப் பிதற்றிவிட்டு மாடிக்குச் செல்லும் படிக்கட்டிலேறி ஓடினாள். இருவரும் அவளைப் பின்தொடர்ந்தனர்.

மூவரும் மாடியில் ஓர் அறைக்குள் நுழைந்தனர். "இந்த அறைதான்" என மெல்லச் சொன்னாள் ஸ்திரீ. ஆனால் அங்கே ரமணியைக் காணவில்லை.

"ரமணி எங்கேயடி பாதகி!" என்றுத்திரத்தோடு வினவினன் ஜனார்த்தனன்.

வெருண்ட பார்வையுடன் பாதகி தன் ஆடையுள் மறைத்துவைத்திருந்த கடிதத்தை எடுத்துக்கொடுத்தாள்.

ஜஹாங்கீர் அதை வாசித்தான். "ரமணீ! ரமணீ! இதற்காகவோ நான் வந்தேன்!" என்ற மொழிகளுடன் மூர்ச்சையுற்றவனைப் போல் அருகேயிருந்த கட்டிலின்மீது சாய்ந்தான்.

அவனது குரலினுல் சன்யாசியின் விழிகளிலும் ஜலம் ததும்பி விட்டது.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

ஷாஜிஹானும் தாஜ் மஹாலும்.

வட இந்தியாவை ஜெயித்து அதில் பல்லாண்டளவும் கீர்த்தியுடன் ஆண்டுவந்த மொகலாய சக்ரவர்த்திகளுள் "உலக ராஜன்" எனப் பொருள்தரும் ஷாஜிகான் என்பான் ஐந்தாவது ஆவான். இவன் சரி நீதி செலுத்திய அக்பர் சக்ரவர்த்தியின் பேரன். இவனை அரண்மனைகன் கட்டிய ஷாஜிகான் என்பாரு மூளர். இவன் அரசாண்டது கி. பி. 1627-ம் ஆண்டு முதல் 1658 வரைக்கும். இவன் காலத்தில் ராஜ்யத்தில் சண்டை சச்சரவுக ளதிகமில்லாமல் சமாதானமே தழைத்தோங்கியது. அவனது அமைச்சர்கள் புத்திமான்களாயும் தங்கள் அரசனுக்கு நியாயமான ஆலோசனை சொல்லுபவராயு மிருந்தனர். அவனது சேனையோ நிகரற்றது. அத்தகைய பெரும் பேறுகளையுடைய இவனுக்கு அவற்றிலுண்டான கீர்த்தியை, நீவட்டியின்கீழ்த் தீபமாக்கவல்ல மற்றேர் பாக்கியமும் வாய்த்திருந்தது. அது யாதெனின், தன் கொழுநனையே தெய்வமாகக் கருதிக் கற்பையே பெறுதற்கரிய அணிகலமாகக் கொண்டிருந்த ஸ்திரீ ரத்னத்தை அவன் மனையாளாகப் பெற்றிருந்ததேயாம். ஷாஜிகான் அத்தகைய பெண்மணியைப் பெண்டாகப்பெற்ற வரலாற்றைச் சுருக்கி இங்கே கூறுவாம்.

இவன் தகப்பன் ஜிஹாங்கீர் சக்ரவர்த்தி ஆக்ரா நகரத்தில் அரசு புரிந்து வருங்காலத்தில் ஒருநாள் இராஜ குடும்பத்தினர்களான ஸ்திரீகளும் ஆடவரும் மந்திரிகளும் பிரபுக்களும் மற்றேரும் களிப்பாகக் காலங்கழிக்குமாறு வேடிக்கையான உத்தரவு ஒன்று பிறப்பித்தான். குறிப்பிட்ட நாளில் இராஜ கன்னிகைகளும் ஸ்திரீகளும் பிரபுக்களின் குமாரிகளும் நூதனமா யலங்கரித்த கடைகள் வைக்கவேண்டுமென்றும்,

அவற்றில் விநோதமான சரக்குகள் விற்கப்படவேண்டுமென்றும், அப் பொருள்களை இராஜ குமாரர்களும் பிரபுக்களும் சொன்ன விலைகொ டுத்து வாங்கவேண்டுமென்றும் பிறப்பித்த இவ் வுத்தரவைக் கேட்டு மகிழாதாரில்லை.

உல்லாசமான அந்நாள் குறிப்பிடப்பட்டது. ஆக்ரா நகரத்தின் அரண்மனைகளும் வீதிகளும் செவ்வனே அலங்கரிக்கப்பெற்றிருந்தன. எங்கும் பந்தல்போடப்பட்டது. விநோதமாயும் விமரிசையாயும் அலங் கரிக்கப்பட்ட கடைகள் எங்கும் நிறைந்திருந்தன. பேரழகுவாய்ந்த யுவதிகள் அதியற்புதமாய் நிருமித்திருந்த சிங்காரக் கடைகளும் தங்கத் தட்டுகளில் ஜொலித்துக்கொண்டிருந்த சரக்குகளும் பார்ப்போர் மன தைச் சடுதியிற் கவருவதாயின. இராஜாக்களும் மந்திரிகளும் மற்றும் பெரிய மனிதர்களும் தாங்கள் கோரிய கடைகளுக்குச் சென்று நாடிய பொருள் வாங்குவாராயினர். அதுபோலவே இளவரசனாகிய ஷாஜிகானும் தனது ஆப்த நண்பருடன் கடைகளின் விநோதங்களைப் பார்த்து மகிழ் வுற்று வருங்கால் அவனது மனதை மாயமாய்க் கொள்ளைகொண்ட மின்னற்கொடிபோன்று அதி ரூபலாவண்யம் அமைந்த ஓர் யௌவன ஸ்திரீயின் கடைக்கு வந்தான். அவள் அதி சௌந்தரியமுடையவள். அவளுடைய சங்கம்போன்ற கழுத்தும், தாமரை மலர்போன்ற முகமும், கரு நெய்தல்போன்ற கண்ணும், காந்தள் மலர்போன்ற கையும், நீர் கொண்ட கருமேகம்போன்ற கூந்தலும், தங்கக் கொடிபோன்ற தேக மும் பார்க்கப் பார்க்கப் புதுமையாயிருந்தன. அவள் வடிவழகை வர்ணித் தல் எளிதன்று. அக்காலத்தில் அப்படிப்பட்ட அழகி இல்லை என்றே சொல்லலாம். நிற்க, அவளது மிகுந்த புத்திக் கூர்மையும் மகா சாமர்த் திய குணமும் சந்திர பிம்பம்போன்ற அவளது முகத்தில் பிரதிபலித் தன. அவ்வழகி அரசிளங் குமாரனைக் கண்டமாத்திரத்தில் ஜாடையாய் எழுந்து மரியாதைசெய்து நாணத்தால் தலைகுனிந்து ஓர் புறமாய்ச் சற்று ஒதுங்கி நின்றனள்.

இதைக்கண்ட ஷாஜிகான், உடனே அப்பெண்மணியுடன் வார்த் தையாடப் பேராவல்கொண்டு அவள் கடையை யணுகி, "பெண்ணே! உனது கடைச் சரக்குகளைத் தயையுடன் காட்டுவாயோ" எனப் பகர்ந் தனன். அது கேட்ட மம்தாஜ் மஹால் என்னும் பெயரிய அவ்வழகி இராஜ குமாரனைத் தக்க வாசனத்திலிருத்தி, நவரத்தினங்களை அழகான தங்கத் தட்டில் வைத்து ஒவ்வொன்றின் ஏற்றத் தாழ்ச்சியைத் தனது மதுரமொழிகளால் உரைத்துக் கடைசியில் மிக விலையேறப்பெற்ற வைரக்கல்லைப்போல் அதி சாதுரியமாய்ச் செதுக்கப்பட்டிருந்த ஓர் கற்

கண்டுக்கட்டியை எடுத்துக்கொடுத்து "இதுபோன்ற வைரம் இக்காசினியிலில்லை, இதன் அருமை தெரிந்து தக்க கிரயம் கொடுத்து வாங்கும் பிரபுக்களும் அருமை என்றனள்.

இவ்வினிய வசனங்களைக் கேட்ட ஷாஜிகான் இவ் வபூர்வ ரத்தினத்தைத் தான் வாங்காவிடில் தனது அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் குறைவெனக் கருதி, "மாதரசே! இதன் விலை என்னை?" எனலும், மம்தாஜ் மஹால் மிகக் கம்பீரமான குரலுடன் "இதன் விலை ஒரு லக்ஷம் ரூபாய்தான்" என்றாள். உடனே ஷாஜிகான் ஒன்றும் யோசியாமல் லக்ஷம் ரூபாயையும் கொடுத்து அதைப்பெற்று அரண்மனை அடைந்தான். பிறகு அக்கன்னிகையின் வரலாற்றை விசாரிக்குங்கால் அவள், சக்கரவர்த்தியின் மைத்துனனும் தனது மாற்றாந்தாய் மாமனும் முதல் மந்திரியுமாகிய அசோப்கானின் அருமைப் புதல்வி எனத் தெற்றென விளங்க, உடனே அவ்வணங்கைத் தன்னிட மழைத்துவரத் தன் நம்பிக்கையுள்ள தூதுவனை யனுப்பி அவள் வரவை அடங்கா வாவலுடன் எதிர்நோக்கி நின்றான்.

தூதுவனின் வார்த்தைகளைச் சிறிதும் அல்ட்சியஞ் செய்யாது, தனக்கு நேரிருக்கும் பெரும் பாக்கியத்தையும் புகழையும் தீர்க்காலோசனைசெய்து, அரசிளங் குமரனின் பல்லிதப் பெருமையையு மறிந்தவளாதலின், உடனே தூதுவன் தொடர்ந்துவர மாளிகையை யடைந்து இளவரசனின் தனி அறையில் ஓர் மூலையில் நாணத்தால் வெட்கித் தலை குனிந்து, தன்னொளியால் அவ்வறையின் அந்தகாரத்தை அகற்றி ஜொகஜ் ஜோதியாய் ஜொலித்து நிற்கு மடந்தையைக் கண்டு பின்வருமாறு பகரலுற்றான் ஷாஜிகான். "பெண்கள் நாயகமே! வர்ணிப்பதற்கரிய உனது பேரழகும், உனது அமிழ்திலுமினிய மதுரவசனங்களும், பொறை, அடக்கம், நாணம் முதலிய ஸ்திரீகளுக்குரிய குணங்களும், உனது அதிதீக்ஷண்ய புத்தியும் என தகத்தை முற்றும் கவர்ந்துகொண்டன. உன் போன்ற நற்குண நற்செய்கை வாய்ந்த ஓர் பெண்மணி என தரண்மனை நாயகமாகவிருக்கப் பெரிதும் விரும்புகின்றேன். நாமிருவரும் நமக் கேற்ற உயிர்த்தோழரை நாடித் தேடுகின்றோமாதலின், நீ என்னை உனது கணவனாக ஏற்றுக்கொள்ள விரும்பின், யான் அதிர்ஷ்டசாலியாவேன். இருவரும் பலனடைவோம்." இவ் வசனத்தைக் கேட்டு அவள் மிகுதியும் வெட்கிக் குனிந்த சிலையுடன் தக்க பதிலளிக்க நாவெழாமல் "அரசரிஷ்டம் அடியாள் பாக்கியம்" எனக் கேட்ட ஷாஜிகான் பெருமகிழ்ச்சி கொண்டு, "பெண்ணே! உனதில்லத்துக் கேகுக" என மொழிந்து ஆனந்தக் கடலி லாழ்ந்திருந்தனன்.

373

சக்ரவர்த்தியாகிய ஜிகாங்கீரும், சக்ரவர்த்தினியாகிய உலக ஜோதியெனப் பொருள்தரும் நூர்ஜிகானும், பெண்ணின் தந்தையாகிய மந்திரி அசோப்கானும் முற்றும் சம்மதிக்க, இளவரசனாகிய ஷாஜிகானுக்கும் தேவ கன்னிகைபோன்ற மும்தாஜ் மஹாலுக்கும் மிகச் சிறப்பாகவும் அதிவிமரிசையுடனும் ஆக்ரா பட்டணத்தில் கலியாணம் நடந்தேறியது. இவர்களது இல்வாழ்க்கையையும் ஆக்ரா நகரில் கட்டப்பட்டிருக்கும் உலகப் பிரசித்திபெற்ற தாஜ் மஹாலைப்பற்றியும் பின்னொரு சஞ்சிகையிற் கூறுவோம்.

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்,

கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர்,

முத்தியாலுப்பேட்டை, புதுவை.

வடலூர் சமரச சன்மார்க்க சாதக சங்கம்.

அன்பர் பலரும் கடவுளிடம் தங்களின் முறைப்பாடுகூறிக் கனிந்துருகும் வண்ணம் அமுதமன்ன மொழிகளால் 'திருவருட்பா' எனும் நிவ்விய பிரபந்தத்தை இயற்றியருளிய திருவருட்பிரகாச வள்ளலாராகிய சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் ஸ்தாபித்து நடத்திவந்த "சமரச சன்மார்க்க சங்கம்" தற்போது நடைபெறுமை குறித்து ஷெ சங்கத்தின் உண்மைக் கருத்துகளை வெளிப்படுத்தும் சாதக சங்கமாயுள்ள ஷெ சங்கத்தின் 6-வது வருடாந்த சபை சென்ற 9 – 2 – 14 தைப்பூசத்தன்று, வடலூரில் கூடி நடைபெற்றது. அதற்கு வெளியூர்களிலிருந்து பல பிரபுக்களும் அறிவாளிகளான பல வித்வ சிரோமணிகளும் மற்றுஞ் சிலரும் விஜயம் செய்திருந்தனர். சென்னை அஷ்டாவதானம் பூவை ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனமமர, பண்ருட்டி ஸ்ரீமான் தங்கவேல்பிள்ளை யவர்கள் 'குருவணக்கம்' என்பதும், கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை யவர்கள் "சங்க வருடாந்த வரலாறு" என்பதும், கோட்ட மருதூர் ஸ்ரீமான் க. முத்து வெங்கடாசலப்பிள்ளை யவர்கள் 'குருஜாதகம்' என்பதும் மிக்க அருமையாகக்கூறி முடித்தபின், சபாநாயகர் தாமியற்றிய நிந்தாஸ்துதியும் முடிவுரையும் கூறி முடித்தனர். மறுதினமாகிய 10 – 2 – 14-ல் சபை கூடிக் கடவுள் வணக்கமும் சபாநாயகரின் முகவுரையும் கூறி முடிந்தபின், காரணப்பட்டு சமரச

பஜனை ஸ்ரீமான் ச. மு. கந்தசாமிப்பிள்ளை யவர்களால் 'குருஸ்துதி' என்பதும், வண்டிப்பாளையம் மாறன் வள்ளலடிமை ஸ்ரீமான் பு. வெ. பாலகிருஷ்ண முதலியாரவர்களால் "சங்கீதமென்பது சற்சன வசீனம்" என்பதும், வேலூர் ஸ்ரீமான் M. நாகப்ப செட்டியார் (Clerk District Police office) அவர்களால் 'தமிழ்' என்பதும் மிக்க அருமையாக உபந்நிய சிக்கப்பட்டபின், சபாநாயகர் முடிவுரை கூறச் சபை கலைந்தது. மறு தினம் மேட்டுக்குப்பத்திலுள்ள 'சித்திவளாகம்' திருமாளிகைக்குச் செல் லுங்கால், வழியில் கருங்குழியிலுள்ளார் உபசரிக்க அவ்வுபசரணையை யேற்றுக்கொண்டு மேட்டுக்குப்பம் சென்று அங்குக் கூடலூர் ஸ்ரீமான் சிவ - துரைசாமி தேசிகரவர்களால் 'குருபக்தி' என்னும் விஷயம் உபந்நியசிக்கப்பட்டு மேற்படியாரா லியற்றிய "இராமலிங்க சுவாமிகள் வருகைப் பதிகம்" என்னும் நூல் அரங்கேற்றி அன்பர்கட்கு விநியோ கிக்கப்பட்டபின், கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை யவர்க ளால் பின்பற்றிப் பேசப்பட்டு மீண்டும் வடலூர் வந்து அடுத்த 12 – 2 – 14-ல் விருத்தாசலம் பென்ஷன் தாசில் ஸ்ரீமான் முருகேசப் பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின்கீழ், சபை கூடி, கடவுள் வாழ்த்தும் சபாநாயகர் முகவுரையும் கூறியபின், திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீமான் தி. வடிவேலு முதலியாரவர்களால் 'அன்பு' என்பதும், விருத்தாசலம் ஸ்ரீமான் வி. கு. சண்முக சுந்தரம்பிள்ளை யவர்களால் 'தர்மம்' என்பதும் அருமையாக உபந்நியசிக்கப்பட்டுச் சபாநாயகரின் ஆழ்ந்த கருத்தமைந்த முடிவுரைக்குப் பின் மாறன் வள்ளலடிமை ஸ்ரீமான் பு. வே. பால் கிருஷ்ண முதலியாரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டுச் சபை குதூ கலமாக முடிவுபெற்றது. இச்சபைக்கு இவ் வருஷம் வேட்டவலம் ஜமீன்தாரவர்களைச் சாசுவத அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது மிக்க மேன்மையுடையதே. இனி இச்சபை குறைவுறாது அக்கிராசனாதி பதி யவர்களால் ஆதரிக்கப்படுமென்பதற்கு எட்டுணையு மையமின்று. இறைவன் திருவருளால் இச்சபை நீடோழி ஓங்கி வளர்வதாக. தைப்பூசத் தன்று அருட்பிரகாச வள்ளலாகும் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் மறை வுற்றபடியால் அன்று ஷெ சுவாமிகள்மீது உண்மை யன்புடைய அடி யார் பலரும் வடலூர் சென்று மகோற்சவம் கொண்டாடுதல் வழக்கம். அதன்படி இவ் வருடமும் அநேக பக்திமான்கள் விஜயம் செய்திருந் தனர். "சத்திய ஞானசபை" என ஷெ சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட் டுள்ள ஆலயத்தில் காலை பூஜை நிறைவேறியபின் ஆண் பெண் இரு பாலாரும் பேதமின்றி ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு (அருட்பா) புத்தகம் இலங்கும்படி பஜனைபுரிவதும் தங்களை மறந்து ஆனந்தக் கூத்

தாடுவதும் அனுபவித்தார்க்கே விளங்கும். நமது இந்து ஜன சமூகத்திற்கு இதுபோன்ற ஆலயம் மிக்க நன்மை பயக்கத்தக்கதே. ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் திருவடிகளே சரணம்.

சென்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர்,

திருவண்ணாமலை.

மாம்ஸ பக்ஷண நிராகரணம்.

(முற்றொடர்ச்சி.)

மனிதர் யாங்ஙனம் மரணவத்தையில் அவலமுற்று நடுங்குகின்றனரோ அங்ஙலையில் மற்ற ஜீவப்பிராணிகளும் சிறிதும் பிறழாது தத்தளிக்கின்றன. ஆகவே கருதுமளவில் எழுவகைப் பிறப்பினுட் டோன்றிய அஃறிணை, உயர்திணைப் பொருள்களாகிய ஜீவபேதங்கள் முற்றும் தமது ஜீவியகாலத்தில் சுகானுபவ வாற்றலிற் நிலைத்துள்ளனவாகக் கருதல் வேண்டும்.

இது கிடக்க, மதகரி, குதிரை, இடபம், நாய் முதலிய விலங்கினங்கள் நம்மனோர்க்கு எவற் பணிவிடை செய்து வருகின்றன என எண்ணுவர் சிலர். அற்றேல் மேற்கூறிவந்த விலங்கினங்கள் இயல்பில் மலசல விசர்ச்சனஞ் செய்தபோழ்து, அவை குழுமுமிடத்துச் சென்றே அவற்றை நீக்குவான் முயன்று சுத்திபண்ணி வருவதோடு ஸ்நானபானாதிகளைச் சிறிதுந் தாழ்க்காது செய்துவருகின்றோமன்றே? அன்றியும் உயர்ந்த பான்மையில் பசு முதலிய சில மிருகங்களையும், கருடன் மயில் முதலிய பட்சிகளையும் தெய்வத் தோற்றமென வெண்ணிப் பேணியும் வழிபடுகின்றோம். அவற்றின் உண்மைகளை விசாரிக்குமிடத்து அந்தரங்கமாக அவைகளிடத்துள்ள விசேட சக்திகளால் மனுடர்கட்கு ஏற்பட்டுள்ள குணங்கள் எண்ணில. அவற்றுள் இழிதிணையாகிய ஆனை முதலிய பிராணிகள், நமக்குத் தொண்டு செய்வாமெனத் தணிவுகொடு முற்பட்டுவந் தூழியஞ்செய்து வருகின்றனவென்று புகல்வது எங்ஙன்? மனிதர் இவுளி, இபம், எருது, ஒட்டகம் இவைபோல்வன பலவின விலங்கினங்களை மைந்தர் ஏறி நடாத்தும் வாகனமாகக்கொண்டும், பிறிது செயற்கண் எவற்பா டியற்றிக்கொள்ளுவ தனுபவமெனுங் கொள்கைக்கு அளவிறந்த செல்வவான்கள் தாம் அருமையாகப் பெற்று வளர்த்த மகவினைப்போலவே நாயினைத் தம் மடிமீதும் பஞ்சணைமீதும் வைத்துப்

பாராட்டிச் சோட்டி வருதல் மண்டலத்தின்கண் கண்கூடன்றே? இனி ஆயுதங்களால் மானவர் மிருக வருக்கங்களை அறுத்துக்கொன்றதின் பின்னர் அதனைத் துண்டுபடுத்தி வேறு வேறுக்கிவரும் இறைச்சியை லவணம், பல்காயம் ஒருங்கே கூட்டி அரைத்துச் சேர்த்ததனை அக்கினி யாற் பதமாக்கிப் பதமோடு அளாவியன்றே வுண்ணு நின்றனர். தவிர, தம் நகங்களாலேனும், பற்களாற் கடித்தேனு முபயோகிப்பாரின்று.

புலி, கடுவாய், சிங்கம், செந்நாய், நாய், நரி, பூனை எனும் பல விலங்கினங்களும் அவைகளின் குட்டிகளும் இயல்பில் மாம்ஸ வுணவு உட்கொண்டபோது, ஜீரணமாகுதற்குரிய விதத்தில், சிறு குடல்கள், 12 அடிகள் கொண்டுள்ளனவாகவும், புல், பூண்டு, இலை, தளிர், காய், கனி இவற்றை ஆகாரத்தின் பொருட்டுக் கறித்துட்கொண்டு சுகமுற்று வாழும் பசு, எருது, மான், புல்வாய், கலை, ஆடு, ஒட்டகம், எருமை இச் சாலங்கட்கும் அவற்றின் பறழ்கட்குஞ் சிறு குடர் 42 ஜாதி அடிகளாம். மேற்கூறியாங்கு மனுடர்கட்குஞ் சிறு குடர் 42 அடிகளாகச் செப்பி யுள்ளார், இரணவயித்திய சாத்திரத்திற் றேர்ந்த ஆங்கிலேய நிபுணர். இந் நிண்ணயத் தோற்றத்தால், புல் முதற் பல வுணவருந்தும் ஏழைப் பிராணிகளின் ஜீரண சக்திக்கியன்ற குடலும், ஞான வுணர்வடைந்துள மாந்தர்களின் குடரும் ஒரே ரீதியில் கடவுள் படைப்பில் அமைந்துள்ளன. ஆதலால், ஜீவகாருண்ணியச் செய்கையை நாம் மேற்கொண்டடைதற் கிஃதே நன்னெறிப் பாடெனச் செவ்விதின் ஆராய்ந்தறிக. இனும் சிங்கம், கடுவாய், புலி, நாய், நரி இங்ஙனமுள்ள மிருகங்களின் கடைவாய் முதலிய விடத்து, வூனுண்டிக்குதவுங் கூரிய பற்கள் இருக்கின்றன. அது ஒப்ப, கடவுள் சிருட்டியில் மண்ணவர் தமக்கும் வேறுபாடின்றி யுள்ளனவென்றுரைக்கும் ஆசங்கையுள்ளார்க்கு, அதனதன் தீக்குணங்களும் நம்மாட்டுளவாமோ எனக் கேட்பின் அன்னோர் வாளா விருப்பர் கொலோ?

பிசிதம் எனும் வூனைப் பருகுகின்ற தன்மையாலன்றே பிசாசிற்குக் காரணப் பெயராயிற்று என்ப. இதுபோன்று பிசித வூணர் என்ற பெயரும் இராக்கதர் பாலு மமைந்துளது. இது நிற்க, தெய்வ சிந்தனை நம்போல் அச் சீவப்பிராணிகட்கு முளவாமோவெனும் வினு வெளிப்படின், நாம் நமது வாணுளில் நாடோறும் தெய்வ வழிபாட்டினில் செயத்தகுங் கடமைகளிற் சிறிதுந் தவரு தினுற்றிவருவ துண்டுகொல் என்ற ஐயப்பாடின்றுந் தீர்ந்ததில்லை. ஆதலான், மற்றை ஜீவகோடிகள் நெறியினை இதுகாறும் இவ்விதம் என்றுரைப்பது சீரிதாமோ. போஜ

னம், பானம் முதலியவற்றில் மிருகங்கட்கு நன்மை தீமைகளைக் கண் டுணர் சக்தியுள்ளனவாமோ எனப் பரியாலோசிக்கின், நமதான்றோர் பண்டைக்காலத்தில் பரிவுற்று வகுத்துரைத்தருளிய சாத்திரத்தாலும், அனுபவத்தாலும், இன்னின்ன வஸ்துக்கள் விஷமுடையனவென்றும் அஃதற்றன இவையென்று மறிந்து அதன் பலாபலங்களை வரைகாட்டி யிருந்தும், அறிவற்ற மூடர் அதனை யுணராது விடத்தை யுட்கொண்டு மயக்கமடைந்தன ரநேகர், உயிரிழந்தார் பலர், அந்தோ! இவர் மதி யிருந்தவாறென்னை?

அழிவுகாட்டும் பச்சிலை எதுவெனினும் அதனை அணுகாதகன்று செல்லும் மிருகங்களும் பலவுள. ஆகவே, ஆடு நீண்டாப்பாலை எனும் பச்சிலையை ஆடுகள் மோப்பங்கொண்டபோதே உண்ணாது ஓடிச் செல்லு கின்றன. இப்படி அளவற்ற விஷ போசனப் பொருட்களை உட்கொள் ளாது உயர்ந்து வாழும் ஜந்துக்கள் கணக்கற்ற வருப்பிற் பொருந்தி யுள்ளன. இனி, நாம் பயின்றுவரும் நானாவித பாடைக் கண்ணுள்ள கல்விப் பயிற்சிகள், மேல் வகுத்துக் கூறிய பிராணிகட் கில்லையே என் போமேல், அதன்கண் போந்த நியாயம் விசாரிக்கில், விகங்கம், விலங்கு இவை வழங்கிவரும் சர்ப்பன்ன பாஷையன்றி, நமது கூட்டங்களில் தினே தினே வழங்கும் பேச்சில் ஊடாடிவரும் அமிழ்தினுமினிய தமிழ் மொழிகளையும் வடசொற்களையும் வேறான பாஷைகளிற் பொருந்திய பல் வேறான வார்த்தைகளையும் நாம் கற்பித்துப் பயிற்றிய வண்ணமே கிளி கள் பூவைகள் கற்றுக்கொண்டு கிளக்குகின்றன. இவ் வண்மை அங்கை யின் நெல்லியங் கனியே.

பஞ்சேந்திரிய வுணர்ச்சியில் மிகச் சிறந்த கட்புல வுணர்வுகொண் டுள கருடன், புறவு இவைகள் வானத்தில் பன்னெடுந்தூரங் கிளர்ந்து பறந்து செல்லினும், அவை அவை இலக்கியம் வைத்துள விடங்களில் வந்து சேர்ந்து வசிக்கின்றன. கழிந்த டிரான்ஸ்வால் யுத்தத்தில் சில சேனவீரர் தமது களத்தில் நின்று போர்புரியுந் தருணத்தில், தமது தோழ வீரருக்குதவும் வண்ணம் தங்கள் அந்தரங்க எண்ணத்தை ஆங்கில பாஷையில் வரைந்துள்ள சிறு கடிதத்தைத் தம் இன்னுயிரி னினிதாய்ப் பேணி வளர்த்த அப்புறாக்களின் அலகிற் கொடுத்தனுப்பவும், அன்னோர் குறிப்பில் விருப்புடன் சென்று அவரவரிடஞ் செலுத்தி உபகரித்துவந் தனவென்றே பல பத்திரிகை வாயிலாக நாம் படித்த படிப்பினை என் னென்று புகல்வாம்.

"குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்"

என்றூர் பொய்யில் புலவர் மெய்யாய். கல்வியின்பாற் பட்டுள்ள அறிவின் வளர்ச்சிக்கு, குறிப்பே முதன்மையுடைத்து. இப் பகுதிகளின் பெருமையை விளக்கிற் பெருகும். ஈண்டு விரிவஞ்சிவிடுத்தனம்.

இம்மட்டோ, சின்னுளின் முன்னர், புனு தேசவாசிகளாகிய சில மாராட்டிர கூத்திரியர், புருக்கள், கிளிகள், வெண்ணிறப் பெரிய கிள்ளைகள், சிறியதோர் சிட்டுக்குருவி முதலிய பல பறவைகளைத் தமதரும் பெறல் வைப்பென இங்ஙகர்வயின் கொடுபோந்தனர். சுருங்கச் சொல்லின், அவற்றினூர் கிளி பல பாஷைகளில் பல்லோர் பெயர் வரைந்துள்ள கடிதத் துண்டுகளை ஒருங்கே விரவுவித்து, அத் துண்டுகளில் எதை விரும்பினும் அதனை எடுத்தளிக்குந் திறமுடையதாக விருந்தது. சிட்டுக்குருவி நூற்கண் மிகச் சிறு பாகைகளைக் கோத்துக் காட்டுகின்றன. பல நாணயங்களோடு கள்ள நாயணயத்தைச் சேர்த்துவைப்பின், அக் கள்ள நாணயம் வேண்டும் என விரும்பினுல் அதனை எடுத்துக்காட்டுங் கிள்ளையுமுள. மீண்டும் அதனதன் நுட்ப மதியினை நினைப்புழிச் சாலவும் வியப்பு வளரும். நாம் பயிற்றுவிக்கும் பாஷைச் சொற்களைக் கற்று நமதிரு செவிகளிடத்தும் இனிமை தந்ததவும் பறவைகள் இயற்கையில் பேசிவரும் சர்ப்பன்ன பாஷையை இதுபரியந்தம் மாந்தர் கேட்டறிந்து கண்டிலரென்பது முயற்கொம்பேயாம்.

தூர தேசாடனஞ் செய்வதால் வரும் பல நாகரிக வுணர்ச்சியும் தேசாந்தர வர்த்தமானங்களை அறிந்ததனனே அடையும் அறிவின் வளர்ச்சியும் பெற்றுள்ள மனிசர் தன்மையை அப்பிராணிகள் அடைவது எங்ஙனம்? என விளம்புவார் பற்பலர். மதுரஞ்சேர்ந்த சீனி, சருக்கரை, கண்டு முதற் பல இன்சுவைப் பொருட்களைப் பூமிக்குளே எனினும், அதன் மேற்புறமெனினும் வைத்திருப்பின் ஆங்காங்கே மகிழ்வுடன் சிற்றெறும்பு முதலிய ஜெந்துக்கள் கிரகித்து உண்ணுகின்றன. இது வெள்ளிடை மலையெனக் கண்டறிதற் பாற்று தெள்ளிதின். இவைகளால் சிற்றெறும்பு உட்பட்ட ஜீவப் பிராணிகள், நிலத்தின்கண் மேலுங் கீழுமுள்ள பொருட்களைக் கண்ணுற்று அறிந்துகொள்ளும் பெற்றி சேர்ந்துள்ளனவாகவே மதிக்கவேண்டும். ஐம்புல னுகர்ச்சியில் ஆக்கிராண வுணர்வின் திட்பமும் மனிதர் அடைந்திருக்கிறார்கள். எறும்பு, ஈக்கள் பூமியின் கீழிழிந்து கண்டறியும் நுட்பங்களை நாம் கற்றிருப்போமேல், பண்டைக்காலத்து நம் முன்னோர் நிலத்திடை மறைத்துவைத்திராநின்ற நிதிக்குவைகளை எடுத்தாளுதற் பொருட்டுப் பாதாள அஞ்சனமும் வேண்டுமோ? காய் கரி முதற் சில மிருகங்களும் இவ்விதவியல்பின. இதனனே அப்பிரத்தியகூத்தில் காணும் பொருளைக் கண்டறி

யுஞ் சக்தியில்லார் மனிதரே என்க. இத்தகைய போதிய திருட்டாந் தங்களால், ஜீவகோடிகளது மேல் உணர்வை யுணர்ந்திருப்பாரேல், அவை களின் விசேட பிறப்பினை மறுத்துரைப்பாருமுளரோ ?

இனி, இரண்டாவது ஆசங்கைக்கு உத்தரம் கவிலுதும். அஜ மேதம், அசுவமேதம், கோமேதம் முதலிய பல கிருதுக்களைச் செய்வத னாலே வரும் பயன்கள் இனையவெனச் சொல்லும் தருமநெறிகள் எத னின் ஒப்புக்கூறுவான் வாய்ந்தனதெனில், மக்கண்மேற் செங்கோன்மை யாய் முறைசெய்து காப்பாற்று மன்னவன், தனது இராச்சிய நியாய நிபுண சாத்திர தந்திரங்களான் மானுடர் அபிவிருத்தியை முன்னிட்டு ஏற்படுஞ் சதுர்வித நியாய சோதனைகளில் கடையாய மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அத்தரும சாத்திர முறையினைய தண்டம், புண் ணியமா ! பாவமா ! என வுள்ளும் நியப்பாடிதற்குச் சான்றென்க.

(இன்னும் வரும்.)

வித்வான், ஜி. சுவாமிநாதன் ஆசாரி,

கோட்டாறு.

ஓர் வேண்டுகோளுக்கு விடை.

நியானம் :—

சித்தத்தின் நியேயாகார விருத்திப்பிரவாகம் நியானமெனப்படும். இது விச்சின்னம், சந்ததம் என இருவகைப்படும்.

இதர விஷயாகார விருத்தியால் இடைப்பட்ட நியேயாகார விருத்தி விச்சின்னத் நியானமாம்.

தைலதாரையைப் போன்று அந்தராயம் (இடையீடு) இன்றிய நியேயாகார விருத்திப் பிரவாகம் சந்தத நியான்மாம்.

நியாஞநிகாரி :—

நியேய வஸ்துவின்கண் நிட இராகமும், இதர விஷயங்களின் கண் அநிட வீராகமுமுடையோர் விச்சின்னத் நியானத்நிற்கும், நியேய வஸ்துவின்கண் நிட இராகமும் இதர விஷயங்களின்கண் நிட வீராகமு முடையோர் சந்ததத் நியானத்நிற்கும் அதிகாரியாவர்.

நியானிக்குங் காலம் :—

நியேயவஸ்துவின்கண் நிட இராகமும், இதரவிஷயங்களின்கண் தீவிரதர நிடவிராகமுமுடைய காலமெல்லாம் நியானிக்குங் காலமாம்.

380

தியானத்தின் பயன் :—

தியேயாகாரப் பிராப்தியே தியானத்தின் பயனும்.

தியானிக்கு முறை :—

தியேய வஸ்துவின் மகிமையையும், தியாதாவின் பரிபக்குவத் தையும் அநுசரித்ததாகலின் தியானிக்கு முறை சற்குருமுகத்தா னறி தற்பாலது.

ஹிதவசனி.

இலக்கியப் பகுதி.

வாக்குண்டாம் காப்புச் செய்யுளில் ஒரு ரகசியம்.

வெண்பா.

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலரா
ளேக்குண்டா மேனி நடுங்காது – பூக்கொண்டு
தப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

தப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தப்பாமல் பூக் கொண்டு சார்வார் தமக்கு நல்ல வாக்கும் மனமும் மாமலராள் நோக்கும் உண்டாம். மேனி நடுங்காது. இதன்பொருள் வெளிப்படை. தப்பாமல் - பூஜா நியமமும் விரத நியமமும் தவறாமல் எனக்கொள்க.

இனி ரகசியமாவது.

தப்பார்பூ, திருமேனி, தும்பி, கையான், பாதம் தப்பாமற் கொண்டு சார்வார் தமக்கு மேனி நடுங்காதென்பதாம்.

சித்தர்களின் ஆயுள்வேத வுண்மைப்படி பஞ்ச மூலிகைகளிலு லாம் சித்தியும் மேனி நடுங்காதென்பதைச் சுட்டிக் கூறப்பட்டுள்ளது.

பஞ்ச மூலிகைகளாவன :

1. தப்பார்பூ (கொட்டைக்கரந்தை)
2. திருமேனி (குப்பைமேனி)
3. தும்பி (விநாயகர் பூசைக்குரிய தும்பைப்பூ)
4. கையான் (கையாந்தகரை, கரிசலாங்கண்ணி)
5. பாதம் (சிறு செருப்படி.)

381

தப்பர்மலென்பது அளவைச் சுட்டுகின்றது. அதனைச் சித்தர் நூல் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இச்சிறு நூல் பாடியருளிய ஔவையார் உக்கிரப்பெருவழுதியார் கால முதல் கம்பர் காலம்வரை பல நூற்றாண்டளவும் ஜீவித்திருத்தல் மானிட ரியற்கைக்கு மாறுபட்டுள தாகையால் இரண்டு ஔவைமார் இருத்தல் வேண்டுமென்பது சிலர் கொள்கை. ஆராய்ச்சிக் குறைவால் சொல்லும் இது பிழையேயாம். சருவ ரோகங்களுந் தொடராமைக்கு ஔஷதமொன்று கண்டுணர்ந்தமையாலும் 'அதியமான்' அளித்த கரு நெல்லிக்கனி யுட்கொண்டமையாலும் ஞானக்குறள் பாடியிருப்பதால் பதஞ்சலியார் போன்று யோகசித்தியு முடைமையானும் ஔவையார் ஒருவரே. இதன்றி அவர் பல நூற்றாண்டு மைசூர்ப் பிராந்தியமாம் கன்னட தேயத்தில் காங்கோணி எனும் புதுப்பெயருங் கொண்டு பல்லாண்டு வசித்திருந்ததாய் நூதன ஆராய்ச்சியால் புலப்படுகின்றது.

5, 6 ஆண்டுகளுக்கு முன் நாம் பத்திரிகை வாயிலாகச் சென்னையில் 'ஆதிபகவன்' எனுந் தொடர் மொழிக்கு இரட்டுற மொழிதலாக உத்தர வேதமார்க்கத் தோற்றுவாய்க்குத் திருவள்ளுவரின் பெற்றோரா மிருவர் காரணர் என்றும் கூறினேம். ஔவையார் ஒருவரென்பதற்குப் பல நியாயங்காட்டி ஒரு வியாசம் பிந்தி எழுத நோக்கங்கொண்டுள்ளேம்.

தி. வெங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர் பென்ஷன்தார்.

சாத்திரப் பகுதி.

நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

60. தசம புருஷ நியாயம்: — தசம புருஷன் – பத்தாமவன், நியாயம் – திருஷ்டாந்தம். இது தனது சரீர தத்துவங்களைக் களைந்து பார்த்த அறிவே தனது சொரூபமென உணராமை இதுபோலவென்கின்றது. அதாவது: நதியின் பிரவாகத்தைக் கடந்து கரையேறிய பத்துப் பேர்களில் ஒருவன் தான் நீங்கிய ஒன்பதுபேரை யெண்ணிப் பார்த்து அவ் வொன்பதுபேரை யெண்ணிய தன்னைப் பத்தாமவன் என உணராது மயங்கியதுபோல வென்பதாம்.

61. சிம்ஹாவலோகன நியாயம் : — சிம்ஹம் – சிங்கம், அவலோகனம் – பார்த்தல், நியாயம் – திருஷ்டாந்தம். இது ஒரு சாமர்த்திய புருஷன் உத்தேசித்த காரியத்தைச் செய்து முடித்த பிறகு இன்னும் ஏதாவது காரிய முண்டாவெனக் கருதிப் பார்த்தல் இதுபோன்ற தென்கின்றது. அதாவது : சிங்கமானது தான் உத்தேசித்த மிருகத்தைக் கொன்று இன்னும் ஏதாவது மிருகங்க ளுண்டாவெனத் திரும்பிப் பார்த்தல்போல வென்பதாம்.

62. குகாந்தகார நியாயம் : — குகாந்தகாரம் – குகையின்கண்ணுள்ள இருள், நியாயம் – திருஷ்டாந்தம். இது அஞ்ஞானம் அநாதியாயினும் ஞானோதயமான கணத்திலேயே நீங்கிப்போத லிதுபோலவென்கின்றது. அதாவது : குகையினிடத்து இருளானது வெகுகாலந் தங்கியிருந்தபோதிலும் அதன் நீக்கத்தில் வெகுகாலம் வேண்டியதில்லாமல் தீபம் வந்த அந்தக் கணத்திலேயே அவ்விருள் நீங்கிவிடல்போல வென்பதாம்.

63. குந்தீ புத்ர நியாயம் : — குந்தீ புத்ரன் – பாண்டு மகாராஜாவின் பார்யையாகிய குந்தீ தேவியினிடத்து சூர்ய்மூர்த்தியினுக்ரகத்தால் உதித்த கர்ண மகாராஜன், நியாயம் – திருஷ்டாந்தம். இது தம் நிஜஸ்வரூப ஞானமின்றிய ஜீவர்கள் சற்குருபதேசத்தால் தம்பால் ஜீவத்துவத்தைக் காணுது தம்மைச் சிவமாயறிந் தின்புருவாய் நிலைத்த லிதுபோலவென்கின்றது. அதாவது : கர்ணனவன் தன்பாலுள்ள குந்தீ புத்ரத் தன்மையை சூர்யமூர்த்தியால் உணர்ந்து ராதா புத்ரத் தன்மையைத் தன்பாற் காணுது குந்தீ புத்ரத் தன்மையனாய் நிலைத் தின்புற்றமை போல வென்பதாம்.

64. தக்ர நவநீத நியாயம் : — தக்ரம் – மோர், நவநீதம் – வெண்ணெய், நியாயம் – திருஷ்டாந்தம். இது தேகாதிப் பிரபஞ்சத்தினின்றும் தம்மை வேறு பூணர்ந்த பெரியோர், அத்தேகாதிப் பிரபஞ்சத்தின் கண்ணிருந்தும் எவ்வகையாலும் அப்பிரபஞ்சப் பற்றினை யடையாராத லிதுபோலவென்கின்றது. அதாவது : தயிரினின்றும் வேறாய்க் கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெயானது அம்மோரிலேயே கிடந்தபோதிலும் எவ்வகையாலும் அம்மோரில் கலப்புறுவாறுபோல வென்பதாம்.

65. துர்ஜன தோஷ நியாயம் : — துர்ஜனன் – துஷ்டன், தோஷம் – சந்தோஷம், நியாயம் – திருஷ்டாந்தம். இது பூர்வ பக்ஷியின் மதத்தை அவனுக்குச் சந்தோஷ முண்டாகும் வண்ணம் அங்கீகரித்துப் பின் மறுத்த லிதுபோல வென்கின்றது. உடன்படல், மறுத்தல் என்பது

மிதுவே. அதாவது: ஒரு பலவான் தன்னை யடிக்கவந்த பலஹீனனுகிய துஷ்டனுடைய சந்தோஷத்தின் பொருட்டு அவன் தன்னை யடிப்பதற் கிடங்கொடுத்துப் பின் அத்துஷ்டனைச் சம்ஹரிப்பதுபோல வென்பதாம்.

66. சூசீ ஸ்காந்த நியாயம்: — சூசீ – ஊசி, ஸ்காந்தம் – காந்தக் கல், நியாயம் – திருஷ்டாந்தம். இது ஒரு காரியத்தைக் குறித்து வாஸ்தவ அகர்த்தாவாயுள்ளாரிடத்து (உபேக்ஷயா யிருப்பவரிடத்து) கர்த்திருத்வம், அகர்த்திருத்வம் இரண்டும் காணப்பட லிதுபோலவென்கின்றது. அதாவது: ஊசியின் அசைதலைக் குறித்துக் காந்தக்கல்லானது உபேட்சாத் தன்மையால் அகர்த்தாவாயும், சன்னிதானத் தன்மையால் கர்த்தாவாயு மிருத்தல்போல வென்பதாம்.

67. ஜகன் மணி நியாயம்: — ஜகத் – உலகத்தார், மணி – இரத்தினம், நியாயம் – திருஷ்டாந்தம். இதுவும் மேலது போன்றதேயாம். அதாவது: இரத்தினமானது உலகத்தவர்க்குத் தன்னைப்பற்றி யுண்டாம் பிரவர்த்தியைக் குறித்து உபேக்ஷாத் தன்மையால் அகர்த்தாவாயும், சன்னிதானத் தன்மையால் கர்த்தாவாயு மிருத்தல்போல வென்பதாம்.

68. வம்ச பேடக நியாயம்:—வம்சம்–மூங்கில், பேடகம்–கூடை, நியாயம் – திருஷ்டாந்தம். இது எத்தனைச் செல்வமுறினும் அமைதி பெரு நெஞ்ச மிதுபோன்றதென்கின்றது. அதாவது: மூங்கில் கூடையானது எவ்வளவு ஜலம பெய்யினும் நிரம்பாமைபோல வென்பதாம். (வம்ச பேடகம் – மூங்கிலா லமைக்கப்பட்ட பத்திரக் குடலை.)

(இன்னும் வரும்.)

அநந்தபத்மநாபஸ்வாமி

காஞ்சீபுரம்.

சுஜன சம்வாதம்.

விவேகி யார்?

உபோற்காதம்.

" இருவே றுலகத் தியற்கை நிருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. "

" ஆ! ஆ!! ஆ!!! நாம் எவ்வளவு புத்திசாலி! எவ்வளவு புத்திசாலி!! நம்மைப்போல் விவேகியும் உலகிலுண்டோ!

நாம் நம் சிறுபிராயத்தில் நம் தந்தையின் கஷ்டார்ஜிதத்தால் ஜீவித்திருந்தபோது எத்தனைத் துன்பங்களை யனுபவித்தோம். நமக்கு

384

வசிக்க வசதியான இடந்தானு மப்போ தில்லாமையால் சத்திரஞ் சாவடி களில்வசித்துவந்தோமன்றே! உண்ண வுணவின்றி இரண்டொரு தினங் கள் பட்டினியுங் கிடந்தோமே. நல்ல உடை யில்லாமையால் கிழடத்த உடையை நாமும், நம் சகோதாரும், பிதாவும் ஒருங்கே தரித்துக்கொண்டு வெளியே போதற்கின்றி, ஒருவர் வெளியே போய்வந்தபின் மற்றொரு வர் அவ் வுடையை யுடுத்திக்கொண்டு வெளியே போகும்படி யிருந்தது. ஏன்? நமது தந்தை அத்தனே விவேகியல்லர். கேவலம் பிராரப்த பக்தர். வெறும் வைதீகப் பிடுங்கல். எல்லாம் நல்லகாலமிருந்தால் கிட்டுமென்று யாதொரு முயற்சியுமின்றி யிருந்துவிட்டார். அவரைப்போல நாமு மிருந்துவிட்டால் இந்த நல்ல ஸ்திதி நமக்கு வாய்க்குமா?

பிறகு நமது புத்திசாலித்தனத்தால் எத்தனேயோ தந்திரங்களெல் லாஞ் செய்தல்லவா இப்போதிருக்கும் நல்லந்தஸ்தைச் சம்பாதித்தோம். ஆ! ஆ!! என்ன நமது புத்தி! புத்தியில் பிரஹஸ்பதியென் றொருவ னிருப்பதாகக் கதை கேட்டிருக்கின்றோம். அவன்தான் நமக்கிடாவாஞ! அவன் இந்திரன் கீழ்ப் புரோகிதன்றானே. நாமப்படி யாருக்காவது கீழ்ப் படிந்திருக்கின்றோமா! நமக்குக் கீழ் அநேகர் கைகட்டி நின்று பணி கேட்கின்றார்கள். நாம் இந்தச் செல்வத்தைப் பெற முதலி லனுசரித்த உபாயங்க ளெவ்வளவோ விவேகமானவை. அக்காலத்து நாம் வர்த்தக முதலிய தன சம்பாதன காரியத்தில் பிரவேசிப்பதற்கு வேண்டிய முதற் பொரு ளில்லாமையால் பொருளாளிகளில் சிலரைச் சினேகம்பண்ணி னேம். நம்மைப்போன்ற ஒரு ஏழை மனிதன் தனிகரைச் சினேகஞ் செய்வதென்றால் அதென்ன சாமானியகாரியமா, அவர்களென்ன இலே சில் நம் வசப்பட்டார்களா! அவர்கள் முழுநோக்கமும் நம்மீது படியும்படி எத்தனேயோ சாமர்த்தியமா யிச்சகம் பேசிவந்தோம். அதாவது: அவர் கள் ஆ கா கா, ஊ கூ கூ என்று நகைக்கும்படி அநேக சிற்றின்ப ரசபூரித வசனங்களால் அவர்களே மகிழ்வித்தோம். இன்னும் இப்படிப்பட்ட உபா யங்க ளெவ்வள வெவ்வளவோ செய்து அத்தனிகர்களின் தயவைச் சம்பா தித்தபின் நம் முயற்சியானது தகுந்த பலனத்தர ஆரம்பித்துவிட்டது. அதாவது அச் செல்வர்களின் சகாயத்தால் நாம் சிறுகச் சிறுகப் பொரு ளீட்டுங் காரியங்களில் நுழைந்து இப்போது நாம் ஒரு பெரிய பிரபுவாய் விளங்குகின்றோம். இப்போது நம்மை யெந்தப் பயலாவது "இவனிப் படிப்பட்ட அகாரியங்கள் செய்தவன்" என்று சொல்லத் துணிவானு? மனிதனுய்ப் பிறந்தவ னெந்தக் காரியத்தைச் செய்தாவது பொருளேச் சேகரித்துவிட்டால் "கைத்துடையான் காற்கெழுதுங்கு கடல் ஞாலம்" என்றபடி அவன் கீழ் யாவரும் கையேந்தி நிற்பர். இதை

யறிந்து நாம் பொருள்தேடச் செய்த யத்தனங்களை இது செய்யத் தகாத வையென்றும், உலகம் பழிக்குமென்றும் செய்யாது விட்டிருப்போமா னால் நாம் ஒருபோதும் இந்த ஸ்திதியைப் பெற்றிருக்கமாட்டோம். அப் போது நாம் தனிகர்களிடம் நடந்துகொண்டவைகளை நினைக்க நமக்கே வெட்கமாகத்தா னிருக்கிறது. ஆயினும் அப்போது நம் நடவடிக்கையைக் கண்டு பழித்த நம் சினேகிதர்கள் இப்போது நமது உன்னத பதவியைக் கண்டு பெருமூச்சுவிட்டு நமது தயவை யெதிர்பார்க்கிறார்களன்றே! அப் படிப்பட்ட பழைய சினேகிதர்களை நாம் சமீபத்தில் சேர்க்கவேவொண் ணாது. என்? அவர்கள் நம்மை யேதாவது பொருளுதவும்படி கேட்கக் கூடும். அப்படி யவர்கட்குக் கொடுப்பதை நமது "மைடியர் லேடிக்கு"க் கொடுத்தால் அச் சீமாட்டியின் அன்புநிறைந்த ஒரு முத்தமாவது கிட்டும். ஆ! அப்பெருமாட்டியின் முத்தம் எத்தனை சிலாக்கியம்! பெறற்கரிய பாக்கியம்!! இது நம்மைப்போன்ற ஜெண்டில்மேன்களுக்கன்றே தெரி யும். அஃ அஃ ஹா! அஃ அஃ ஹா!!"

என்று ஒரு பிரபுவானவர், தமது மாடியின்மீதுள்ள சிங்காரச் சாலை யொன்றில் ஒரு சோபாவின்மீது சாய்ந்துகொண்டு எண்ணி யெண் ணிச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது யாரோ கதவைத் தட்டின சப்தங் கேட்டது. உடனே பிரபுவானவர் தமது சென்றகால சம்பவத்தை விஷயமாகவுடைய மனோ ராஜ்யத்தை அவ்வளவிலே நிறுத்திக்கொண்டு கதவைத் திறந்து பார்க்க ஒரு லெட்டர் பியூன் புக்போஸ்டு ஒன்றை யவரிடங் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

(இன்னும் வரும்.)

ஆ. செங்கல்வராயமுதலியார்

காஞ்சீபுரம்.

சமாசாரம்.

ஒரு பிரமாண்ட பீரங்கி.

இதுகாறும் உலகத்திற் செய்யப்பட்டிராத பிரமாண்ட பீரங்கி யொன்று அமெரிக்கர்கள் செய்திருக்கிறார்கள். அதன் வாயகலம் 14 அங்குலம். நிறை 50 டன். அதைச் செய்வதற்குச் செலவு 22000 பவுன். ஒரு வெடிக்குச் செலவு 150 பவுன். 5½ அடி நீளமும் 1660 பவுண் நிறையு முள்ள இருப்பாயுதத்தை 6 மைல் தூரம் இந்தப் பீரங்கி எறியுமாம்.

இலங்கையில் பிளேக்.

பிளேக்நோய் கடலேக் கடந்து இலங்கைத்தீவிலும் புகுந்துவிட்டது. அந் நோய் பரவுவதைத் தடுக்கும் வண்ணம் ஜனங்களுக்கு பிளேக் அம்மை குத்தப்படுகிறது. நோய்க்கும் அம்மை குத்திக்கொள்வதற்கும் அஞ்சித் திரளான இந்திய ஜனங்கள் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பி விட்டார்கள். இவ்வாறு திரும்பியவர்களில் இருவருக்குத் தூத்துக்குடியில் பிளேக் கண்டதாம், ஆனல் தூத்துக்குடி அதிகாரிகளின் நன்முயற்சிகளினல் அந் நகரத்தில் நோய் பரவவில்லே.

ஒரு நெடிய ரயில் வண்டித்தொடர்.

அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா ரயில்வே அதிகாரிகள் 2000 கஜத்திற்கதிக நீளமுள்ள ஒரு ரயில் வண்டித்தொடர் அமைத்திருக்கிறார்கள். 133 வண்டிகள் கோக்கப்பட்ட இந்த வண்டித்தொடரை 3 இஞ்சின்கள் இழுத்துச் செல்லுகின்றனவாம். இவ்வளவு நெடிய வண்டித்தொடர் உலகத்தில் வேறெங்கேயு மில்லேயாம்.

தந்தியில்லா டெலிபோன்.

ஷெவாலியே மார்செனி என்பவர் சிசிலித்தீவுக் கப்பாலுள்ள இத்தாலியா சண்டைக் கப்பல்களுக்குள் தந்தியில்லா டெலிபோன் மார்க்கப் பேச்சை ஸ்தாபிக்க முயன்றதில் அனுகூலமடைந்தாராம்.

சிநேக லதாதேவி.

வங்காளத்தில் சிநேக லதாதேவி யென்ற பாலிகையின் விவாகத்தினிமித்தம் மாப்பிள்ளே வீட்டார் வரதக்ஷிணேயாகக் கேட்ட பெருந்தொகையைக் கொடுக்கவியலாமல் பெண்ணின் பெற்றோர்கள் தங்கள் பிரிய புத்திரியின் சுகத்தினிமித்தம் தாங்கள் வசித்தவீட்டை அடகு வைக்கத் தீர்மானித்தார்கள். தனக்காகத் தன் பெற்றோர்கள் கஷ்டமுறச் சகிக்காமல் வீரச் சிறுமியாகிய சிநேகலதை நெருப்பில் வீழ்ந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். வரதக்ஷிணே காரணமாக 'சாரளபாலதேவி' என்ற மற்றொரு மாதும் தற்கொலே செய்துகொண்டாள். இந்த இரண்டு மரணங்களிலுலேனும் வரதக்ஷிணே வாங்கக் கங்கணங் கட்டிக்கொண்டு திரியும் புத்திமான்களுக்கு நல்லுணர்வு பிறக்கவேண்டும். வரதக்ஷிணே வாங்கும் இவ்வநாகரிக வழக்கத்தினின்றும் நீங்கி நம்மிந்துதேசம் என்று நன்மையடையுமோ?